தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.96/மா/2024
நாள் 19.09.2024

திரு இரா தீபக் விக்ராந்த் - மனுதாரர்
சென்னை–107

மண்டல அலுவலர் – எதிர் மனுதாரர்
மண்டலம் 7
பெரு நகர சென்னை மாநகராட்சி

சென்னை 107, கோல்டன் ஜார்ஜ் நகர், ஸ்ரீ மகாலஷ்மி மந்திரா அடுக்ககம் 1405, பிளாக் 1,B விங் நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலையில் வசிக்கும் திரு இரா தீபக் விக்ராந்த் என்பவரின் 18.01.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.01.2024 அன்று பெறப்பட்டு 96/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது..

ஆணை

சென்னை 107, கோல்டன் ஜார்ஜ் நகர், ஸ்ரீ மகாலஷ்மி மந்திரா அடுக்ககம் 1405, பிளாக் 1,B விங் நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் சாலையில் வசிக்கும் திரு இரா தீபக் விக்ராந்த் என்பவர் தனது 18.01.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"Greater Chennai Corporation, Zone 7, Ward 92, Church Road, EB Office Road Corner- Giant illegal advertisement Board placed in the splay area (Public Property) of the above said roads corner குறித்து முதல் புகார் எண் 2023 202KMM 27 Oct 2023 பொது இடத்தை ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள illegal advertisement Board ஐ அகற்ற கோரியும், மண்டல அலுவலர் மற்றும் வார்டு 92 உதவிப்பொறியாளர் இருவருக்கும் பொது இடத்தை ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள illegal advertisement Boardஐ அகற்ற கோரியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் இரண்டாவது புகார் எண் 2023 894 ATI 09 Nov 2023-ல்

மண்டல அலுவலர் மற்றும் வார்டு 92 உதவிப்பொறியாளர் இருவருக்கும் பொது இடத்தை ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள illegal advertisement Boardஐ அகற்ற கோரியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மூன்றாவது புகார் நாள் 24 Nov 2023 பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர், மண்டல துணை ஆணையாளர் ஆகியோருக்கு (மத்திய மண்டலம்) email மூலமாக வார்டு 92, உதவிப் பொறியாளர் மற்றும் அம்பத்தூர் மண்டல அலுவலர் மீது பொது இடத்தை ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள illegal advertisement Boardஐ அகற்ற தவறியதற்காக புகார் அளித்ததாக தெரிவித்து மேற்கண்ட illegal advertisement Boardஐ அகற்ற வார்டு 92 உதவிப்பொறியாளர் மற்றும் அம்பத்தூர் மண்டல அலுவலர் ஆகியோருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 22.01.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் மண்டல அலுவலர் தன்னுடைய 22.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தை ஆய்வு செய்து அனுமதியின்றி நிறுவப்பட்ட பதாகையை (Banner) அகற்றப்பட்டது மற்றும் விளம்பர பலகையின் கட்டமைப்பு (structure)யும் அகற்றுமாறு தெரிவிக்கப்பட்டு பின்பு கட்டமைப்புக்களையும் அகற்றப்பட்டு விட்டது என்றும், பொதுமக்களுக்கு எந்த விதமான போக்குவரத்து இடையூறு ஏற்படாமல் இருக்க மீண்டும் அவ்விடத்தில் விளம்பர பலகைகள் அனுமதிக்கக்கூடாது என விளம்பர பலகை நிறுவிய தனி நபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், முன்னர் விளம்பர பலகை நிறுவிய இடத்தின் புகைப்படமும் விளம்பர பலகை அகற்றப்பட்ட பின் உள்ள புகைப்படத்தையும் இணைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்."

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 27.08.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 27.08.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, வார்டு 9-ல் உள்ள சர்ச் ரோட்டில் பொது இடத்தில் மிக பிரமாண்டமான விளம்பர போர்டுகள் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் வைக்கப்பட்டுள்ளன. இவற்றால் நடைபாதையில் செல்லும் பொது மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் உள்ளது என்று கூறியும், பல புகார் மனுக்கள் மண்டலம் 7-ன் அலுவலருக்கு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்தது. ஆனால் தற்போது மேலே தெரிவித்துள்ள விளம்பரப் பதாகை சென்னை மாநகராட்சியால் நீக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

6) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் உதவி செயற்பொறியாளர் 27.08.2024 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் ஆய்வு செய்து அனுமதியின்றி நிறுவப்பட்ட விளம்பர பலகை (Banner) அகற்றப்பட்டது மற்றும் விளம்பர பலகையின் கட்டமைப்புகளும் (Structure)அகற்றப்பட்டு விட்டது. மேலும், பொதுமக்களுக்கு எந்த விதமான போக்குவரத்து இடையூறும் ஏற்படாமல் இருக்க மீண்டும் அவ்விடத்தில் விளம்பர பலகைகள் அனுமதிக்கக் கூடாது என விளம்பர பலகை நிறுவிய தனி நபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முன்னர் விளம்பர பலகை நிறுவிய இடத்தின் புகைப்படமும், விளம்பர பலகை அகற்றப்பட்டபின் உள்ள புகைப்படத்தையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் சென்னை மாநகராட்சி, மண்டலம் 7, வார்டு 92–ல் உள்ள சர்ச் ரோட்டில் பொது இடத்தில் மிக பிரமாண்டமான விளம்பர போர்டுகள் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் வைக்கப்பட்டுள்ளன. இவற்றால் நடைபாதையில் செல்லும் பொது மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் உள்ளது என்று கூறியும் பல புகார் மனுக்கள் மண்டலம் 7ன் மண்டல அலுவலருக்கு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்து அதனை அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலர்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ல் அமைக்கப்பட்டிருந்த விளம்பர பலகை மற்றும் கட்டமைப்புகளும் அகற்றப்பட்டு விட்டது என்றும், பொது மக்களுக்கு எந்தவிதமான போக்குவரத்து இடையூறும் ஏற்படாமல் இருக்க அவ்விடத்தில் விளம்பர பலகைகள் அமைக்கக்கூடாது என்று விளம்பர பலகை நிறுவிய தனிநபருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் தங்களது அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7, வார்டு 92, சர்ச் ரோட்டில் பிரமாண்டமான விளம்பர பலகை அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளது என்ற மனுதாரரின் புகார் குறித்து, நீண்ட காலமாக நடவடிக்கை மேற்கொள்ளாமல், இம்முறைமன்ற விசாரணைக்கு உத்தரவிட்ட பின்பு அவ்விளம்பர பலகை அகற்றப்பட்டுள்ளது என்பது ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

புகார்தாரரின் மனுவின் மீது தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு, விளம்பர பலகை அகற்றப்பட்டதாக மனுதாரர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ன் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், இனி

வருங்காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7ற்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி அமைக்கப்படும் விளம்பர பலகை அகற்றுவது குறித்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 117.0 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள்,2023 பிரிவு 326(22) பின்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இம்மன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்,
1) திரு இரா தீபக் விக்ராந்த்
ஸ்ரீமகாலட்சுமி மந்திரா அடுக்ககம், 1405 பிளாக் 1 பி விங்
நீதிபதி ரத்தினவேல்பாண்டியன் சாலை
கோல்டன் ஜார்ஜ் நகர், சென்னை 107
2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை
சென்னை 600 003
3) மண்டல அலுவலர்
மண்டலம் 7
பெருநகர சென்னை மாநகராட்சி
திருவள்ளுவர் நெடுஞ்சாலை, Opp. Dunlop,
சென்னை 600 053
4) நகராட்சி நிர்வாக இயக்குநர்
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்
சென்னை 600 028
5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம்
சென்னை 600 028

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

27/9/24